# இளநிலை மாணவர்களுக்கான நிகழ்நிலை/ஆன்லைன் பரீட்சை வழிகாட்டிகள்
# (Online Examination Guidelines)
# கலைப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
# 2019/2020

**கற்கை நிகழ்ச்சித் திட்டங்களின் 2020 ஆம் ஆண்டின் 19 இலக்கச் சட்டத்தின் பிரகாரம் (விசேடப் பிரிவு) கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கொழும்புப் பல்கலைக்கழக இளநிலை மாணவர்களுக்கான பரீட்சைகள் நிகழ்நிலை/ஆன்லைன் தளங்களினூடாக நடாத்தப்படவுள்ளது.**

**இவ்வழிகாட்டுதல்கள் ECN4270 மற்றும் ECN4267 ஆகிய கற்கைநெறி அலகுகளுக்குப் பொருந்தாது. கற்கைநெறி அலகுகளுக்காக வழங்கப்பட்ட சிறப்பு வழிகாட்டுதல்களை LMS இல் பார்க்கவும்.**

## பரீட்சைகளுக்கு முன்னர் (Pre-Examination)

1. இரண்டாம் பருவப் பரீட்சை 2019/2020 நிகழ்நிலைத் தளத்தின் ஊடாக நடைபெறும்.

2. தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் மையத்தினால் (Information and Documentation Centre -IDC) குறிப்பிடப்பட்ட இறுதி தினத்தினுள் மாணவர் தகவல் முறைமையினைப் (Student Information System - SIS) பயன்படுத்தி மாணவர்கள் பரீட்சைகளுக்காகப் பதிவுசெய்தல் வேண்டும்.

3. பதிவுசெய்துகொண்ட மாணவர்களது அனுமதி அட்டைகள் பரீட்சைக் கிளையிலிருந்து அவர்களது SIS கணக்கிற்கு அனுப்பப்படும். அனுமதி அட்டைகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களுக்கு பரீட்சைக் கிளையின் பிரதி பதிவாளரை dr@exam.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் அல்லது 011 2500712 / 0112585972 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

4. பரீட்சை நேர அட்டவணை தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் மையத்தினால் (Information and Documentation Centre -IDC) LMS தளத்தினூடாக மாணவர்களுடன் பகிரப்படும்.

5. ஒரு குறிப்பிட்ட தினத்தில் திட்டமிடப்பட்ட ஓர் எழுதப்பட்ட வினாத்தாள் (a written paper) காலை 9.00 மணியளவில் LMS இல் பதிவிறக்கம் செய்யக்கூடியதாக இருக்கும்.

6. **ஓர் எழுத்துக் மதிப்பீட்டினைப் பூர்த்திசெய்து,** அதனை Learning Management System (LMS) இன் ஊடாகச் சமர்ப்பிப்பதற்கு மாணவர்களுக்கு **24 மணித்தியாலங்கள்** வழங்கப்படும்.

7. துறைகள் / அலகுகள் மாணவர்களுக்கு பின்வருவனவற்றை அறிவுறுத்தும்:

   a. திறந்த நூற் பரீட்சை (open book written exam), வாய்வழிப் பரீட்சைகள் (oral examinations), ஒப்படைகள் (assignments), மற்றும் முன்வைப்புகள் (presentations) போன்ற தீர்மானிக்கப்பட்ட முறைமைகள்.

   b. எழுத்து மூலமான சமர்ப்பிப்புகளிற்கான (written submissions) சொற்களின் வரையறை மற்றும் வாய்மொழி மதிப்பீடுகளுக்கான (oral assessments) கால வரையறை.

   c. வாய்மொழிப் பரீட்சைகளுக்கான கால அட்டவணை மற்றும் பயன்படுத்தப்பட வேண்டிய தளங்கள் (platform) தொடர்பான விடயங்களை துறைகள்/ அலகுகள் மாணவர்களுக்குத் தெரியப்படுத்தும்.

   d. திட்டமிடப்பட்ட தினத்தில் ஒதுக்கப்பட்ட தொடர்பு காலப்பகுதியில் மதிப்பீடுகள் தொடர்பான தெளிவுபடுத்தலுக்கான தொடர்பு முறைகள்

8. பரீட்சைக் கட்டமைப்புத் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் நேரடியாக எழுத்து மூலமாக துறைத் தலைவர்/ அலகு ஒருங்கிணைப்பாளருக்கு தெரியப்படுத்தவும்.

**பரீட்சைகளின் பொழுது (During Examinations)**

1. மாணவர்கள் LMS இல் உள்நுழைந்து, பரீட்சைக் கால அட்டவணையின் பிரகாரம் **பொருத்தமான கற்கைநெறி அலகுப் பக்கத்திற்குச்** சென்று மதிப்பீட்டினைப் பதிவிறக்கம் (download) செய்துகொள்ள வேண்டும்.

2. குறித்தவொரு நாளில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள மதிப்பீடு காலை 9.00 மணிக்குள் LMS இல் பதிவிறக்கம் செய்யக்கூடியதாக இருக்கும். LMS இல் உள்நுழைந்து, குறிப்பிட்ட நேரத்தில் மதிப்பீட்டை தாமாகவே பதிவிறக்கம் செய்ய வேண்டியது மாணவர்களது பொறுப்பாகும்.

3. குறித்தவொரு நாளில் திட்டமிடப்பட்ட மதிப்பீடு பதிவிறக்கத்திற்கு கிடைக்கவில்லையாயின் கலைப் பீடத்தின் பிரதி பதிவாளரை drmedfac@med.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அல்லது 0714418483 என்ற இலக்கத்தினூடாகத் தயவுசெய்து தொடர்புகொள்க.

4. மதிப்பீடு தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவை இருப்பின், மாணவர்கள் திட்டமிடப்பட்ட தினத்தில் முற்பகல் 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை அதற்குரிய விரிவுரையாளரைத் தொடர்புகொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

5. ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் படி மதிப்பீடுகளை உரிய நேரத்தில் நிறைவுசெய்ய வேண்டிய பொறுப்பு மாணவர்களுடையது.

6. ஒரு நேர் நபர் பரீட்சையைப் (an in-person examination) போன்றே, உமது விடைகளை அளிப்பதற்கு word process அல்லது type set பயன்படுத்துவதற்கு **நீர் அனுமதிக்கப்படவில்லை.** பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் பொருத்தமான விதிவிலக்குப் பெற்ற எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இவ்விதி பொருந்தாது (உ.ம். பார்வைக் குறைப்பாடு).

7. அனைத்து எழுத்து மூலமான மதிப்பீடுகளும் கட்டாயம் **கைகளால் எழுதப்படல் (handwritten)** வேண்டும். A4 அளவுடைய தாளில் (ruled/lined paper/ or otherwise) உமது விடைகளை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு **கறுப்பு குழிழ் முனைப் பேனையினைப் (black ball point pen)** பயன்படுத்த நீர் அறிவுறுத்தப்படுகின்றீர். தயவுசெய்து உமது கையெழுத்து தெளிவானது என்பதை உறுதிப்படுத்தவும்.

8. ஒவ்வொரு விடைத்தாளின் மேற்பகுதியின் வலது பக்கத்தில் உமது சுட்டெண்ணை தயவுசெய்து எழுதுக. தயவுசெய்து விடைத்தாளின் எந்தவொரு இடத்திலும் உமது பெயரினை எழுத வேண்டாம்.

9. தயவுசெய்து பின்வரும் வடிவத்தினைப் பயன்படுத்தி விடைத்தாள்களுக்கான பக்க இலக்கங்களை (number the pages) இடவும். உதாரணமாக உமது விடைத்தாளின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை 5 எனில், பின்வருமாறு 1/5, 2/5…etc பக்க இலக்கங்கள் இடப்படல் வேண்டும்.

10. உமது விடைத்தாளின் முதல் பக்கமாக பொதுவான முகப்புப் பக்கத்தை (இது LMS இல் வழங்கப்படும்) பயன்படுத்தவும் (பின்னிணைப்பு I). **உமது மதிப்பீட்டின் முதல் பக்கமாக இருக்க வேண்டிய முகப்புப் பக்கத்தை நீர் அச்சிடலாம் அல்லது கைகளினால் எழுதலாம் என்பதை தயவுசெய்து நினைவிற் கொள்க.**

11. விடைத்தாளின் முகப்புப் பக்கத்தில் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படல் வேண்டும்.

12. தயவுசெய்து உமது விடைத்தாள்களை ஸ்கேன் செய்து (scan) அல்லது புகைப்படங்களாக (take photos) எடுத்து **ஒரு தனித்த PDF கோப்பாக** (a single PDF file) மாற்றுக. ஸ்கேன் செய்யப்பட்ட படத்தில் முழு பக்கமும் சரியாக கவரப்பட்டிருப்பதை உறுதிசெய்க. ஸ்கேன் செய்யப்பட்ட விடைத்தாள்கள் தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும் இருப்பதை தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்க. **தனிப்பட்ட பக்கங்களை தனித்தனியாக LMS இல் பதிவேற்றம் செய்ய முடியாது என்பதை தயவுசெய்து நினைவிற் கொள்ளவும்.**

13. **ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு கோப்பு வடிவம் PDF** என்பதை தயவுசெய்து நினைவிற்கொள்க. **PDF கோப்பு (file) பரீட்சார்த்தியின் சுட்டெண்ணைக் கொண்டு பெயரிடப்படல் வேண்டும். உதாரணமாக: A 12345**

14. **JPEG/JPG அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில்** உமது விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்வதற்கு **நீர் அனுமதிக்கப்படமாட்டீர்.**

15. மாணவர்கள் தமது எழுதப்பட்ட மதிப்பீடுகளின் இறுதி வடிவத்தினை LMS இல் நிர்ணயிக்கப்பட்ட 24 மணித்தியால நேரத்திற்குள், அல்லது கால வரையறைக்கு முன்னதாகப் பதிவேற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

16. மாணவர்கள் தமது கணிப்பீடுகளைச் சமர்ப்பித்ததன் பின்னர் சமர்ப்பித்ததற்கான ஒப்புதலாக LMS இன் முழுப் பக்கத்தினை **'சமர்ப்பிக்கப்பட்டது'** என்ற வார்த்தையுடன் ஸ்கிரீன் ஷொட் (screen shot) எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

17. குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான மதிப்பீடுகள் / வாய்வழி மதிப்பீடுகள் என்பன **பரீட்சை மதிப்பீட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதைக் கருத்திற்கொள்க.

**சிக்கல்களைச் சரிசெய்தல் (Troubleshooting)**

1. மாணவர்கள் தமது நேரத்தை நியாயமான முறையில் நிர்வகிக்க அறிவுறுத்தப்படுகின்றனர், இதனால் எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய எந்தவொரு தொழில்நுட்ப அல்லது இணைய இணைப்பு (internet connectivity) சிக்கல்களை ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

2. பரீட்சைக் காலத்தில் தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்பட்டால் (பதிவிறக்குதல் அல்லது பதிவேற்றுதல்) பரீட்சார்த்திகள் உடனடியாக LMS நிர்வாகி திரு. தக்சின திஸ்ஸநாயக்கே அவர்களை dakshina@arts.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் அல்லது 0773797909 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொள்ளலாம்.

3. LMS இல் விடைத்தாளைப் பதிவேற்றுவதில் எதிர்பாராத விதமாக தொழில்நுட்பச் சிக்கல் ஏதேனும் ஏற்படின், ஒரு பரீட்சார்த்தி தனது விடைத்தாளை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் வழியாக மையப்படுத்தப்பட்ட முகவரிக்கு திட்டமிடப்பட்ட கால வரையறைக்குள் அனுப்பலாம்.

| | |
|---|---|
| 1 ஆம் வருடம் | exam1@arts.cmb.ac.lk |
| 2 ஆம் வருடம் | exam2@arts.cmb.ac.lk |
| 3 ஆம் வருடம் | exam3@arts.cmb.ac.lk |
| 4 ஆம் வருடம் | exam4@arts.cmb.ac.lk |

4. இத்தகைய சமர்ப்பிப்புகளில் **பரீட்சார்த்தியின் கற்கைநெறிக் குறியீட்டையும் (course code), சுட்டெண்ணையும் (index number ) மின்னஞ்சலின் தலைப்பு வரியில் (subject line) தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.**

**பரீட்சைகளில் தவறான நடத்தை (Examinations Misconduct)**

1. பரீட்சை முறைகேடு தொடர்பான அனைத்து விதிகளும் நிகழ் நிலைப் பரீட்சைகளின் (online examinations) போதும் பிரயோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு இதன்மூலம் பின்வரும் விதிகள் குறிப்பாக நினைவுபடுத்தப்படுகின்றன:
   - சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள் அனைத்தும் மாணவர்களின் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். குறிப்பிடப்படும் எந்தவொரு மூலமும் (source) பொருத்தமான வழிமுறையைப் பின்பற்றி ஒப்புக்கொள்ளப்பட்டு ஆதாரம் இடப்படுதல் (properly acknowledged) வேண்டும்.
   - உமது விடைகளை எழுதுவதில் ஏதேனும் வகையிலான உதவிகளைப் பெற்றுக்கொள்வது அல்லது வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி வழங்குதல் போன்றவற்றில் இருந்து விலகியிருத்தல் வேண்டும்.
   - விடைகளை ஸ்கிரீன் ஷாட்களாக எடுப்பதிலிருந்தோ (taking screenshots), அதனை வேறு எந்தவொரு நபருடனும் பரிமாறிக்கொள்வதிலிருந்தோ அல்லது வேறு எந்தவொரு ஊடகங்கள் மூலமாகவும் வினாக்கள் மற்றும் / அல்லது விடைகளை நகலெடுத்துப் பிரதி பண்ணுவதில் இருந்தோ (copying and pasting questions and/ or answers) தயவுசெய்து விலகிக் கொள்ள வேண்டும்.
   - ஒதுக்கப்பட்டப் பரீட்சைக் காலத்தில் பாடம் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான எந்தவொரு கோரிக்கைகளையும் இடுகையிடுவதில் இருந்து (posting) விலகிக் கொள்ள வேண்டும்.

2. எந்தவொரு பரீட்சை முறைகேடு நடத்தைக்கும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் எந்தவொரு பரீட்சார்த்திக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நினைவிற் கொள்க.

**மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான நியாயமான வசதிவாய்ப்புகள் (Reasonable Accommodation for Students with Disabilities)**

1. மாற்றுத்திறனாளி மாணவர்கள் பரீட்சைக் காலத்தில் தமக்கு ஏதேனும் சிறப்புத் தேவைகள் வேண்டப்படின், மாற்றுத்திறன் கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தின் (SCSD) கீழ் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆதரவு மையத்திற்கு (CEDREP) குறித்த பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் 0112 580835 என்ற தொலைபேசி எண் மூலம் தெரிவிக்க வேண்டும்.

2. பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் மதிப்பீட்டை வாசிப்பதற்கு மற்றும் / அல்லது எழுதுவதற்கு உதவி பெற்றுக் கொள்ளலாம். உதவி வழங்கும் நபர் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் **மாணவராக இருக்கக்கூடாது.** பிரகடனப் படிவம் (declaration form) உதவி வழங்கும் நபரினால் கையொப்பமிடப்படல் வேண்டும் மற்றும் தேவையான விவரங்களை (பெயர், தொடர்பு இல. மற்றும் தே.அ.அ. இல.) உள்ளடக்கியிருக்க வேண்டும். பிரகடனப் படிவத்தை LMS இல் பெற்றுக்கொள்ள முடியும் அத்துடன் விடைத்தாளுடன் இணைத்து (பின்னிணைப்பு II) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. பதிவுசெய்த ஆனால் மருத்துவக் காரணங்களுக்காகவோ அல்லது பிற உண்மையான காரணங்களுக்காகவோ பரீட்சையினை எதிர்கொள்ள முடியாத மாணவர்கள் தகவல் மற்றும் ஆவண மையத்திற்கு (IDC) எழுத்து மூலமாக idc@arts.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் வாயிலாக காரணத்தைத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய கோரிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒப்புதல் பரிசீலனைக்காகப் பீடச் சபைக்கு அனுப்பப்படும்.

******

**பின்னிணைப்பு I**

**மாணவர்களுக்கான அறிவிப்புப் படிவம்**

**முதலாம் / இரண்டாம் / மூன்றாம் / நான்காம் வருட கலைமாணிப் பரீட்சை**

**இரண்டாம் பருவம் 2019/2020**

**கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்**

பாடத் தலைப்பு -

பாடக் குறியீட்டு இலக்கம் -

சுட்டெண் -

| வினாக்களின் எண்ணிக்கை | சொற்களின் எண்ணிக்கை/ பக்கங்கள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

விடைத்தாளின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை -

சமர்ப்பிப்புத் திகதி -

சரியான முறையில் ஆதாரமிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டவை (மேற்கோள்களாக) தவிர, இம்மதிப்பீடு எனது சொந்தப் படைப்பு என நான் பிரகடனப்படுத்துகின்றேன். மற்றொருவரின் படைப்பினை எனது சொந்தமாக சமர்ப்பிப்பது ஒரு பரீட்சைக் குற்றமாகக் கருதப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

………………………………

கையொப்பம்

## பின்னிணைப்பு II

**மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான அறிவிப்புப் படிவம்**

**முதலாம் / இரண்டாம் / மூன்றாம் / நான்காம் வருட கலைமாணிப் பரீட்சை**

**இரண்டாம் பருவம் 2019/2020**

**கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்**

பாடத் தலைப்பு -

பாடக் குறியீட்டு இலக்கம் -

மாணவர் சுட்டெண் -

உதவியாளரின் பெயர்-

உதவியாளரின் NIC இலக்கம்-

| வினாக்களின் எண்ணிக்கை | சொற்களின் எண்ணிக்கை / **பக்கங்கள்** |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

விடைத்தாளின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை -

சமர்ப்பிப்புத் திகதி -

**மாணவர் பிரகடனம்**

சரியான முறையில் ஆதாரமிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டவை (மேற்கோள்களாக) தவிர, இக்கணிப்பீடு எனது சொந்தப் படைப்பு என நான் பிரகடனப்படுத்துகின்றேன். மற்றொருவரின் படைப்பினை எனது சொந்தமாக சமர்ப்பிப்பது ஒரு பரீட்சைக் குற்றமாகக் கருதப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

……………………………………..

கையொப்பம்

**உதவி வழங்கும் நபரின் பிரகடனம்**

இம்மதிப்பீட்டில் உள்ள விடைகள் மாணவனின் (சுட்டெண்: ) சொந்த எண்ணங்கள் / யோசனைகள் என நான் பிரகடனப்படுத்துகின்றேன். வினாப் பத்திரத்தை வாசிப்பதற்கும், மாணவனின் பதில்களை எழுத்துபூர்வமாகப் பதிவு செய்வதற்கும் மாத்திரமே நான் உதவி வழங்கியுள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………..

கையொப்பம்